**Paper Code No.: 07**

# இரண்டாம் பருவ மதிப்பீடு 2017-18
# மேனிலை முதலாம் ஆண்டு
# தமிழ்
# Second Term Evaluation 2017-18
## Higher Secondary First Year
## (Part II - Tamil)

வகுப்பு : HSE I | நேரம் : $2\frac{1}{2}$ மணி
மதிப்பெண் : 80

குறிப்பு :

- தேர்வுக்கு முன்புள்ள 15 நிமிடம் சிந்தனை நேரமாகும்.
- வழிமுறைகளை நன்கு வாசித்துத் தேவையான வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

***(1 முதல் 5 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக)***

(5 × 1 = 5)

1. "யாதும் ஊரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர்தர வாரா" - என்று கூறும் நூல்.
   அ) மணிமேகலை　ஆ) சிலப்பதிகாரம்
   இ) அகநானூறு　ஈ) புறநானூறு

2. கீழ்வரும் சொல்லில் வினையெச்சம் எது?
   அ) தூங்கி எழுந்தான்　ஆ) வந்தபையன்
   இ) பாடிய பெண்　ஈ) வரைந்த ஓவியம்

3. 'ஓயிலாட்டம்' - என்பது
   அ) ஆண்கள் ஆடும் ஆட்டம்　ஆ) பெண்கள் ஆடுவது
   இ) ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆடுவது　ஈ) தனிநபர் ஆடுவது

4. புதியகலை - புதிய இலக்கியம்
   புதிய வடிவம் - என்னும் கொள்கை
   அ) பெண்ணியம்　ஆ) தலித்தியம்
   இ) நவீனத்துவம்　ஈ) ரொமான்டிசம்

5. 'மூன்றாம் உலகப் போர்' என்னும் நூலின் ஆசிரியர்
   அ) வைரமுத்து　ஆ) பாரதிதாசன்
   இ) பாரதியார்　ஈ) சம்பந்த முதலியார்

***(6 முதல் 10 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடை எழுதவும்.)***

(5 × 3 = 15)

6. தமிழக, கேரளக் கலைகளைத் தொகுத்து அட்டவணைப்படுத்துங்கள்.

7. தோன்றல், திரிதல், கெடுதல் – ஆகிய விகாரப் புணர்ச்சிகளுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

8. சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு நடைபெறும் ஊர்வலத்தில் ஏந்திட மூன்று விழிப்புணர்வு வாக்கிய அட்டைகள் உருவாக்குக.

9. ‘வில்லுப்பாட்டு’ எனும் தமிழகக்கலையினைக் குறித்துச் சிறு குறிப்பு வரைக.

10. தொல்காப்பியம் காட்டும் எண்வகை மெய்ப்பாடுகளைக் குறிப்பிடுக.

*(11 முதல் 15 வரையிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.)* (5 × 4 = 20)

11. மணிமேகலைகாட்டும் இந்திரவிழாவினை வருணித்து எழுதுங்கள்.

12. “ சுரிகூழல் அசைவுற அசைவுறத்
துயிலெழு மயிலென மயிலெனப்
பரிபுரம் ஒலியெழ ஒலியெழப்
பனிமொழியவர்கடை திறமினோ“

– இப்பாடலின் நயம் பாராட்டுக.

13. நலிந்துவரும் நாடகக் கலையை மீட்டுக் கொண்டுவர எண்ணும் நீங்கள் உங்கள் பள்ளிக் கலைவிழாவில் ஒரு நாடகம் நடத்திட அனுமதி கோரி பள்ளி முதல்வருக்குக் கடிதம் தயார் செய்க.

14. வயல்களையும், காடுகளையும் அழித்துக் குடியிருப்பு பகுதிகளாக்குவதை விமர்சித்துத் தலையங்கம் ஒன்றைத் தயார் செய்க.

15. இயற்கைச் சீரழிவைச் சுட்டிக்காட்டும் கவிஞர் வைரமுத்துவின் ‘மூன்றாம் உலகப்போர்’ புதினம் குறித்து நூற்குறிப்பு எழுதுக.

*(16 முதல் 21 வரையுள்ள வினாக்களில் எவையேனும் நான்கினுக்கு மட்டும் விடை தருக.)*
(4 × 6 = 24)

16. வெள்ளப்பெருக்கால் பேரிடர் நேரிடும் மக்களுக்கு உதவும் பொருட்டு தேசிய மாணவர் படை உறுப்பினரான நீங்கள் மேற்கொள்ளும் திட்டமிடல் குறிப்புகளை வரிசைப்படுத்துங்கள்.

17. மனிதனின் சுயநலத்தாலே இயற்கை பாதிக்கப்படுகிறது எனும் கருத்தை வெளிப்படுத்தும் சொற்பொழிவு உரை தயார் செய்யுங்கள்.

18 “துண்டொன்றைக்
கட்டிக்கொண்டு
அம்மாவாக முடிகிறது
குழந்தைகளால்
குழந்தையாக முடியாமல்
அல்லற்பட்டுக்கொண்டிருப்பது
அம்மாக்கள்தான்”

– கவிஞர் வெண்ணிலாவின் இக்கவிதையில் வெளிப்படும் இன்றைய சமூகச்சூழலை விவரித்து எழுதுங்கள்.

19. ‘மண்மொழி’ கதையின் கதைக்கருவினை எழுதி வெள்ளையன் பாத்திரப்படைப்பை விளக்குக.

20. ‘கலைகளின் வளர்ச்சிக்கு ஊடகங்களின் பங்கு’ எனும் தலைப்பில் சிறு கட்டுரை எழுதுங்கள்.

21. மக்களின் அறியாமையைப் பணமாக்கிக்கொள்ளும் போலி மருத்துவர்களுக்கு எதிரான விழிப்பு ணர்வு அறிக்கை ஒன்றை உருவாக்குங்கள்.

*(22 முதல் 24 வரையுள்ள வினாக்களில் இரண்டனுக்கு மட்டும் விடை எழுதுக.)*

(2 × 8 = 16)

22. யாருக்கு வேண்டும் அஞ்சலிகள், எதிர்ப்பின்வடிவம், சொல்லாக்கதை என்னும் மூன்று கவிதைகளில் ஊடுருவி நிற்கும் கருத்தினை விமர்சனக் கண்ணோட்டத்துடன் கட்டுரையாக எழுதுங்கள்.

    (பெண் உரிமை - சமத்துவம் - சமூகநிலை)

23. நாட்டுப்புறக் கலைகளை அழிவிலிருந்து பாதுகாக்கப் பல்வேறு கலைநிகழ்ச்சியை நடத்த விரும்பும் நீங்கள் அதற்கான நிகழ்ச்சி நிரல் தயார் செய்யுங்கள்.

24. இலக்கியங்களில் அமையும் பல்வேறு சுவைகளை எடுத்துக்காட்டுடன் விளக்கிக் கருத்தரங்கக் கட்டுரை எழுதுங்கள்.

Set: 1

# இரண்டாம் பருவ மதிப்பீடு 2017-2018
# மேனிலை முதலாம் ஆண்டு
# தமிழ்
# மதிப்பீட்டுக் குறிப்புகள்

**Higher Secondary Fist Year - Tamil**

**HSE: I**

**Scoring Key**

| வரிசை எண் | மதிப்பீட்டுக் குறிப்புகள் | மதிப்பெண் விளக்கம் | மொத்தம் மதிப்பெண் |
|---|---|---|---|
| 1. | புறநானூறு | 1 | 1 |
| 2. | தூங்கி எழுந்தான் | 1 | 1 |
| 3. | ஆண்கள் ஆடும் ஆட்டம் | 1 | 1 |
| 4. | நவீனத்துவம் | 1 | 1 |
| 5. | வைரமுத்து | 1 | 1 |
| 6. | ஒயிலாட்டம் - படையணி<br>வில்லுப்பாட்டு - தெய்யம்<br>கூத்து - கதகளி | 1<br>1<br>1 | <br><br>3 |
| 7. | சரியான எடுத்துகாட்டுகள் | 3 | 3 |
| 8. | பொருத்தமான விடை/கருத்து | 3 | 3 |
| 9. | வில்லுப்பாட்டின் தோற்றம்<br>தன்மை<br>கருத்து | 1<br>1<br>1 | <br><br>3 |
| 10. | பொருத்தமான விடை | 3 | 3 |
| 11. | காப்பியத்தன்மை<br>விழாச்சிறப்பு<br>கருத்து | 2<br>1<br>1 | <br><br>4 |
| 12. | கவிதையின் பொருள்<br>இலக்கணநயம்<br>மொழிநடை | 1<br>2<br>1 | <br><br>4 |
| 13. | கடிதத்தின் கருத்து<br>மொழிநடை<br>வடிவம் | 2<br>1<br>1 | <br><br>4 |
| 14. | கருத்து<br>வடிவம்<br>மொழிநடை | 2<br>1<br>1 | <br><br>4 |
| 15. | கதைக்கரு<br>இயற்கைச் சீரழிவிற்கான காரணங்ள்<br>மொழிநடை | 2<br>1<br>1 | <br><br>4 |
| 16. | காலநிலை மாற்றம்<br>கையாளும் முறைகள்<br>கருத்து<br>மொழிநடை | 2<br>2<br>1<br>1 | <br><br><br>6 |

| வரிசை எண் | மதிப்பீட்டுக் குறிப்புகள் | மதிப்பெண் விளக்கம் | மொத்தம் மதிப்பெண் |
|---|---|---|---|
| 17. | விளைநிலத்தின் தன்மை | 2 | |
| | உணவுப் பொருட்கள் | 2 | |
| | வடிவம் | 1 | |
| | மொழிநடை | 1 | 6 |
| 18. | கவிதையின் பொருள் | 2 | |
| | ஒப்பீடு | 2 | |
| | கதைமாந்தர்களின் தன்மை | 1 | |
| | வடிவம் | 1 | 6 |
| 19. | கதைக்கரு | 2 | |
| | பாத்திரப்படைப்பு | 2 | |
| | ஒப்பீடு | 2 | 6 |
| 20. | கலைகளின் தன்மை | 2 | |
| | இன்றைய நிறை | 2 | |
| | உரைவடிவம் | 2 | 6 |
| 21. | மருத்துவர்கள் இன்றைய நிலை | 2 | |
| | போலி மருந்துகள் | 2 | |
| | விழிப்புணர்வு அறிக்கை | 2 | 6 |
| 22. | பெண் உரிமை | 2 | |
| | சமத்துவம் | 2 | |
| | சமூகநிலை | 3 | |
| | வடிவம் | 1 | 8 |
| 23. | நாட்டுப்புறக் கலைகள் | 3 | |
| | பாதுகாக்கபட வேண்டிய வழிமுறைகள் | 3 | |
| | அமைப்பு | 1 | |
| | மொழிநடை | 1 | 8 |
| 24. | இலக்கியங்களின் பெயர், கால அடிப்படையில் வகைப்படுத்தல் | 6 | |
| | வடிவம் | 1 | |
| | மொழிநடை | 1 | 8 |
| | **மொத்தம்** | 80(20) | 80(20) |